# வடகிழக்கு பருவமழை: தமிழ்நாடு முழுவதும் அமைச்சர்கள்–கழக முன்னணியினர் நிவாரணப் பணி!



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் வட்டம், ஆண்டார் முள்ளிப்பள்ளம் கிராமத்தில் கனமழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து உயிரிழந்தவர்களின் இல்லத்திற்கு நேற்று (22.10.2025) நேரில் சென்று அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.



தென்காசி மாவட்டம் மேலப்பாவூரில் பிரதான கால்வாயில் தடுப்பு சுவர் உடைந்து விளை நிலங்களுக்குள் தண்ணீர் பாய்ந்ததை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் காவேரி சீனித்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, பொன் செல்வன், ரமேஷ், பேரூராட்சி தலைவர் ராஜன் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், கழகத்தினர் உள்ளனர்.



திரு.வி.க நகர் தொகுதி. 6வது மண்டலம், 77வது வட்டம், தட்டான்குளம் பகுதியில் கழிவுநீர் வெளியேற்றும் பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் உள்ள கழிவுநீர் உந்து நிலையம் (Thattankulam Pumping Station) பழுது ஏற்பட்டதால் கழிவுநீர் சாலையில் தேங்கி பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது, இந்த பழுதினை உடனடியாக சரி செய்யப்பட்டதினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டு ஆய்வு செய்து, இனி வரும் காலங்களில் இதுபோன்ற பழுதுகள் ஏற்படாமல் இருக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மேயர் ஆர்.பிரியா, எம்.சாமிக்கண்ணு. செ.தமிழ்வேந்தன், திருமதி.தமிழ்ச்செல்வி சசிகுமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ள நிலையில் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி புதுமனை எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் மழை நீர் சூழ்ந்த நிலையில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதிகாரிகளை அழைத்து மழை நீர் அகற்ற உத்தரவிட்டார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மத்திய ஒன்றிய செயலாளர் பி.வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.பிரகாஷ், மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணமேனன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..



விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கனமழையால் பாதிக்கப்பட்ட, விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில் அரசு அதிகாரிகளுடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர், நகர கழக பொறுப்பாளர்கள் இரா.சக்கரை, எஸ்.வெற்றிவேல் மற்றும் அரசு அதிகாரிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.



வடகிழக்கு பருவ மழையால் பாதிப்படைந்த ஈரோடு மாவட்டம் கொங்கார் பாளையம் ஊராட்சி தரைமட்ட பாலத்தினை வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதுபோது மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், கள்ளிப்பட்டி மணி, சிந்து ரவிச்சந்திரன், கோபி நகர் மன்ற தலைவர் என்.ஆர்.நாகராஜ், சிறுவலூர் எஸ்.எ.முருகன், பொ.ராமச்சந்திரன், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் குற்றாலம் மெயின் அருவியில் சேதமடைந்த பகுதிகளை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீ குமார், கழக நிர்வாகிகள் கிருஷ்ணராஜா, முருகன், அழகு தமிழ் சங்கர், குற்றாலம் குட்டி, சுரேஷ், கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், கழகத்தினர் பலர் உள்ளனர்.



திருச்சியில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில், 21.10.2025 அன்று சென்னை உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு இயக்கப்படுகின்ற சிறப்புப் பேருந்துகளின் இயக்கம் குறித்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.



மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவது குறித்து அமைச்சர் எஸ்.எஸ் சிவசங்கர் அடை மழையிலும் திடீர் ஆய்வு மேற்கொண்டார். உடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மதுரை கோட்ட மேலாண்மை இயக்குனர் சரவணன், மதுரை மண்டல பொது மேலாளர் மணி மற்றும் போக்குவரத்து கழக அதிகாரிகள் உடன் இருந்தார்கள்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, ஏனாதி மங்கலம் எல்லீஸ் அணைக்கட்டு பகுதியில் மழை பாதிப்புகளை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், கை.ரா. சடகோபன், ஓம்சிவசக்திவேல், எம்.ஜெ.கிருஷ்ணமூர்த்தி, நிர்மல்ராஜ், மோகன்ராஜ், கிருஷ்ணராஜ், பழனி, அனந்த குமார், வெங்கடேசன், பாலகுரு மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.